நிலங்களை விட்டுவிடும்படி கேட்டுக்கொண்டார்கள். அந்த நிபந்தனைகளுக் குட்பட்டு அந்த நிலங்களை அவர்களே வைத்துக்கொள்ளலாம் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

Rent for houses under Slum Clearance Board.

* 603. *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the rent for the houses allotted through Slum Clearance Board has been raised from Rs. 10 to Rs. 35 per month; and

(*b*) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : அரசினால் கொடுக்கப்படுகிற வீடுகளுக்கு எந்த அடிப்படையில் வாடகை நிர்ணயிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நிலையான மாதாந்திர வருமானம் இல்லாதவர்களுக்கு மின்சாரம், தண்ணீர் வசதி இல்லாத வீடுகளுக்கு மாதம் 10 ரூபாய். மின்சாரம், தண்ணீர் வசதி உள்ள இடங்களுக்கு நிலையான மாதாந்திர வருமானம் இல்லாதவர்களுக்கு 15 ரூபாய். தண்ணீர் வசதி மட்டும் இருக்கக்கூடிய வீடுகளுக்கு நிலையான மாதாந்திர வருமானம் இல்லாதவர்களுக்கு மாதம் ரூ. 12. மின்சார வசதி மட்டும் இருக்கக்கூடிய வீடுகளுக்கு ரூ. 13.

Sandalwood oil.

* 604. *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether there is any proposal to set up a factory under the Public Sector to extract sandalwood oil in this State?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆரம்பிக்க ஒரு திட்டம் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : ஏற்கனவே நம் மாநிலத்தில் மைசூரைக் காட்டிலும் அதிகமாக உற்பத்தியாகக் கூடிய சந்தன மரத்தில் இருந்து சந்தன எண்ணெய், சோப்பு, இதர கைவினைப் பொருள்களைத் தயாரிக்க ஒரு தொழிற்சாலை அமைப்பதில் என்ன தயக்கம்?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS